22 JUL 1993

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 24 வியாழக்கிழமை (08 07-1993) UTHAYAN –A Lively National Tamil Daily கதிர் 222

# கட்சி மாறுதல் தடையை நீக்க சுதந்திர கட்சி எம்.பி. சட்டமூலம்

## ஐ.தே.கவும் ஆதரவளிக்கும்

கொழும்பு, ஜூலை 8

கட்சி மாறுவதை அனுமதிக்கக் கோரும் சட்டமூலம் ஒன்று சுதந்திரக் கட்சி எம்.பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோவினால் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டது.

இந்த நகல் சட்டமூலம் "அரசமைப்புச் சட்டத்திற்கான 17 ஆவது திருத்தம்" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நகல் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவுடன், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் மனச்சாட்சியின் படி செயற்பட இடமளிக்கக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காமினி கட்சியுடன் பேச விஜேதுங்காவுக்கு அதிகாரம்

### இணைப்பு பெருஞ்பாலும் உறுதி

ஐ.தே கவிலிருந்து பிரிந்து, விலகிச்சென்றவர்களை மீண்டும் கட்சியில் சேர்க்க சமாதானப் பேச்சுக்களை நடத்த ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவுக்கு ஐ.தே.க. செயற்குழு அதிகாரம் வழங்கியுள்ளது.

ஐ தே.கவிலிருந்து பிரிந்து சென்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடனும், ஏனைய குழுக்களுடனும் பேச்சுக்களை நடத்துவதென கட்சியின் செயற்குழு எடுத்த முடிவுகளின்படி அவற்றுடன் பேச்சு நடத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேல்மாகாண சபையில் ஆட்சியை நிர்வகிப்பதற்கும்— வடமேல், தென்மாகாண சபைகளில் ஆட்சியை நிலைநிறுத்தவும் — ஐ.தே.கவுக்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவு பெற வேண்டியுள்ளதால் ஐ.தே.க. இந்த முடிவை எடுத்துள்ளதாக அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## எம். பிக்கள் அல்லாத அனைவரும் சிராவஸ்தியிலிருந்து வெளியேற்றம்

### பாதுகாப்புக் கருதி சபாநாயகர் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 8

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கும் சிராவஸ்தி விடுதியில் தங்கியுள்ள எம்.பிக்கள் அல்லாத அனைவரும் அங்கிருந்து உடனடியாக வெளியேறிவிடவேண்டும் என்று சபாநாயகர் எம். எச். முஹம்மது பணித்திருக்கிறார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த நடவடிக்கையை தாம் எடுத்துள்ளதாக அவர் எம்பிக்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் விடுதலைப் புலிகளின் கொலைப் படையினர் ஊடுருவல் செய்துள்ளனர் என்ற எச்சரிக்கையைத் தொடர்ந்தே சிராவஸ்தி விடுதியின் பாதுகாப்பைப் பலப்படுத்த சபாநாயகர் முடிவு செய்துள்ளார்.

'சிராவஸ்திக்குச் செல்பவர்கள் அனைவரும் மிகவும் நுணுக்கமாக சோதனையிடப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எம்.பிக்கள் அல்லாத பல தமிழ் அரசியல் தலைவர்கள் தங்களின் பாதுகாப்புக்கு சிரா

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மேலதிக தமிழ் மாணவருக்கு மொறட்டுவ அனுமதி மறுப்பு

கொழும்பு, ஜூலை 8

நீதிமன்ற உத்தரவை யடுத்து மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கு அனுமதி பெற்ற வடபகுதியைச் சேர்ந்த 50 தமிழ் மாணவர்களையும் ஏற்க அந்த பல்கலைக்கழக நிர்வாகம் மறுத்து விட்டதாக கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக கடந்த மார்ச் மாதம் கொழும்பு உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி 50 தமிழ் மாணவர்களுக்கு, மொறட்டுவ பல்கலைக்கழகத்துக்கு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கி இருந்தது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கிய கடிதத்துடன் அந்த மாணவர்கள் மொறட்டுவ பல்கலைக்கழகத்துக்குச் சென்றனர்.

''உங்களை சேர்க்கும்படி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வியாழக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கைதாகும் இலங்கைத் தமிழர் ஒரே சிறையில் வைக்கப்படுவர்

### பாதுகாப்புக் கருதி தமிழக அரசு நடவடிக்கை

சென்னை, ஜூலை 8

தமிழ் நாட்டில் கைதாகும் இலங்கைத் தமிழர்களை ஒரே சிறையில் வைக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

பாஸ்போட், வீஸா இல்லாமல் கைது செய்யப்படுபவர்களும், ஏனைய குற்றச் செயல்கள் தொடர்பாக கைது செய்யப்படுபவர்களும் ஒரே சிறையில் வைக்கப்படுவர்.

அந்த சிறைச்சாலையில் பலத்த பாதுகாப்பும் போடப்படவுள்ளது.

சிறைகளில் இருந்து இலங்கைத் தமிழர் தப்பி ஓடும் சம்பவங்கள் அதிகரிப்பதைய டுத்தே இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. (இ-3)

## ஏ.கே. 47 துப்பாக்கிகளை தமிழகத்தில் விற்க முயற்சி

### இலங்கையர் உட்பட 11 பேர் கைது

சென்னை, ஜூலை 8

ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளைக் கடத்திக் கொண்டு வந்து தமிழ் நாட்டில் விற்க முயற்சித்த சம்பவம் ஒன்று தொடர்பாக மூன்று இலங்கைத் தமிழர் உட்பட 11 பேரை தமிழ் நாடு பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான சந்திரன் என்பவர் ரெலோ அமைப்பைச் சேர்ந்தவர் என்றும் —

இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள மதுரை அ

[5 ஆம் பக்கம் பார்க்க]

## பிரேமா கொலை விசாரணை 13 பேர் நீதிமன்றில் ஆஜர்!

கொழும்பு, ஜூலை 8

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச கொலை தொடர்பாக 13 சந்தேக நபர்கள் கொழும்பு மேலதிக நீதிவான் சம்பிரபுத்திபால முன்னிலையில் சி.ஐ.டி. பொலீஸாரால் கடந்த வாரம் ஆஜர் செய்யப்பட்டனர்.

சட்டத்தரணி ஜோசப் சாரின் செய்த விண்ணப்பம் ஒன்றின் மீது இவர்கள் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டனர்.

சந்தேக நபர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகால விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அரசு சட்டவாதி அனுரா மெத்தகொட தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாஸ்கரலிங்கத்துக்கு பிரிட்டிஷ் தூதர் பதவி?

நிதி அமைச்சுச் செயலாளரான திரு. இராமலிங்கம் பாஸ்கரலிங்கம் பிரிட்டனுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்படலாம்.

தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டேரைம்ஸ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

ஜெனரல் சேபால ஆட்டிகல ஜனாதிபதியின் தேசிய பந்தோபஸ்து ஆலோசகராகவும் எயர் லங்கா தலைவராகவும் பதவி ஏற்றதைத் தொடர்ந்து பிரிட்டனுக்கான இலங்கைத் தூதர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தும் சபைத் தலைவராக பணியாற்றும் பி எம். டி. மாரபனவை அந்தப்பதவிக்கு நியமிக்க ஆலோசிக்கப்பட்டதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ - எ)

### சம்பள உயர்வு நிறுத்தம்:

## தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்த முஸ்தீபு

கொழும்பு, ஜூலை 8

அரசாங்க ஊழியர்களுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 30 சத வீத சம்பள உயர்வின் இரண்டாம் கட்ட கொடுப்பனவை ஜனவரி மாதம்வரை தாமதிக்கும் அரசின் முடிவை ஆட்சேபித்து தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுக்கவிருக்கின்றன.

அரசாங்க, தனியார் மற்றும் தோட்டத் துறையைச் சேர்ந்த 29 தொழிற்சங்களின் பிரதிநிதிகள் கடந்த வாரம் கொழும்பில் கூடி இதுதொடர்பான முடிவை எடுத்தனர்.

தொழிற்சங்க கூட்டு கமிட்டியின் தலைவர் அலவி மௌலானா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ராணுவ நடவடிக்கை மணலாற்றில் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 8

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக நேற்று இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

அதேவேளை —மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்ட 'சுமண' இராணுவ நடவடிக்கை தொடர்வதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார். (இ-3-6)

## புலிகள் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 8

இயக்கச்சி இராணுவ முகாமில் கடந்த திங்கட்கிழமை வேலை செய்து கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மோட்டர் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாக நம்பப்படுகிறது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி
தலங்காவற் பிள்ளையார் கோவில்
## தீர்த்த மஹோற்சவம்
08 — 07 — 1993

இரவு சிறப்பு நிகழ்ச்சி:
''அமுதசுரபி'' கலைக் குழுவினரின்
'இது இன்னும் ஆண்கள் உலகமே'
பட்டிமன்றம் இடம்பெறும்.

நடுவர்: ந. சிவநேசன் (பிரபல சட்டத்தரணி)
— உபயகாரர்.
(26404)

---

தென்னிந்திய திருச்சபை
வட்டுக்கோட்டை பேராலயம்
## பெண்கள் ஐக்கியம்

தையல், தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சி புதிய வகுப்புகள் ஆரம்பமாக இருக்கின்றன. பயிற்சி பெறவிரும்புவோர், விண்ணப்பிக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள் பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்களை பெண்கள் ஐக்கிய செயலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15—07—1993

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
செயலாளர்.
வட்டுக்கோட்டை திருச்சபை பெண்கள் ஐக்கியம்,
வட்டுக்கோட்டை.

(6318)

---

## அறிவித்தல்

யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசத் தலைவரின் திருமண வைபவம் 10 - 07 - 1993 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பணியாளர்கள் திருமணத்தில் கலந்து கொள்ள இருப்பதனால் அலுவலகம் திறக்கப்படமாட்டாது. 09 - 07 - 1993ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடவடிக்கைகள் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்

வ. விக்னேஸ்வரன்,
பதில் மாவட்டச் செயலாளர்,
யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசம்.

(சி-5443)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 25 — 04 — 1944
மறைவு: 01 — 07 — 1991

### அமரர் வி. ஏகாம்பரமூர்த்தி
(அதிபர்-யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாசாலை)

திதி: 08 — 07 — 1993

திருமுறைகள், புராணங்கள், இதிகாசங்கள் திவானத்தில் தினம் நினைந்து, சிவனின் பாதம் தரு சுகணைத் தேனுண்டு. மனம், வாய், காயம் தவநெறியின் வழி செலுத்தி, மாணவர்க்குக் குருவாகிக் கலை பயிற்றி, அறிஞர் போற்றும் குலமணியாய்த் திகழ்ந்தவனே! எமது நெஞ்சில் அருள் மணியே ஏகாம்பரமூர்த்தி அப்பா! அரனடிக் கீழ் நீ, மகிழ்ந்து வாழி! வாழி!!

மனைவி, தகப்பனார்,
மாமனார், சகலன்மார்,
மைத்துனிமார், மக்கள்.

இன்பலனை,
மூளாய்,
சுழிபுரம்.

(26351)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணரங்கில்: 11 — 02 — 1924
விண்ணரங்கில்: 08 — 07 — 1989

அமரர்
### நடிகமணி வி. வி. வைரமுத்து

இசையும் நடிப்பும் இனிதாக
எங்கும் விளங்க வைத்தெட்டுத்
திசையும் புகழின் உச்சியிலே
திகழ்ந்த நடிக மாமணியே
அசையும் உலகில் அசையாத
அன்பால் பண்பால் எமை வென்றாய்
தசையுயிராய் எம் முன்னம்
தனிலே வாழ்வோய் வாழியவே.

குடும்பத்தினர்
(26411)

---

## விளையாட்டு நிகழ்வுகள்

சங்கானை ஜுபிற்றர் விளையாட்டுக் கழகத்தினால் பாரதி மைதானத்தில் நடத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.00 மணி :- ஸ்புட்னிக் வி.க. எதிர் ஐங்கரன் வி.க

★ 4.30 மணி :- விக்னேஸ்வரா வி.க. 'ஏ' எதிர் நொதேர்ன் வி.க. 'ஏ'

(உ)

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை பிரம்மஸ்ரீ சபாரத்ன சர்மா ''நாலாயிரம் கண் படைத்திலனே'' எனும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (க)

## பாடசாலைகளில்

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர். திரு. க. பழனிவேற்பிள்ளை தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. வைத்திலிங்கம் கலந்து கொள்கிறார். (க)

## ஆலயங்களில்

வண்ணை கிழக்கு கலட்டி அருள்மிகு எச்சாட்டி மகா மாரி அம்பாள் (கலட்டி அம்மன்) கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினைந்து தினங்கள் நடைபெறும். 22ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (க-111)

o o o

சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோவில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறும். விசேட நாதஸ்வர தவில் கச்சேரியும் இரவு 8மணி அளவில் பொன். சுந்தரலிங்கம் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் தொடர்ந்து பூந்தண்டிகையில் எம்பெருமான் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (க-11)

o o o

அராலி மேற்கு சமாதானக் கோட்டை அருள்மிகு அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ பூர்த்தியும் பொங்கலும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். (க-12)

o o o

தொல்புரம் வழக்கம்பரை அருள்மிகு ஸ்ரீமுத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (க-30)

---

காமினி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை — ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையிலான கூட்டு பெரும்பாலும் உறுதியாகிவிட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கண்டியில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்காவுக்கும் இடையில் நடைபெற்ற முக்கிய சந்திப்பை அடுத்தே புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இரு கட்சிகளுக்கும் இடையில் இணைப்பு ஏற்படும் பட்சத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு 6 அமைச்சர்கள் பதவியும், 2 அமைச்சர்கள் பதவியும் வழங்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகியதால் எம். பி. பதவியை இழந்தவர்களில் இருந்தே இந்த 6 பேரும் தெரிவு செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கிறது. (க-...)

---

## 3ஆவது பிறந்த நாள் வாழ்த்து
08—07—1993

### ★ பிரிய மகள் டாலி ★

அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்ற ஆதியின் வசந்த அமுதவாக்கு பொய்யாகாமல் என்றைக்கும் எல்லோருடனும் அன்போடும், பண்போடும், பழகி பல்லாண்டு வாழ பாசமுடன் வாழ்த்தும்;

அன்பான அம்மா,
பாசமுடன் மாமாமார்'
ஆசை அம்மம்மா,
அன்பு சித்தப்பா, சித்திமார்.

பழம்,
680/2, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி.

(6319)

---

### வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்
(மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு இல. 2973
2ஆம் பரிசு இல. 118
3ஆம் பரிசு இல. 1224

10 ஆறுதல் பரிசு இலக்கங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1257 | 4829 | 730 | 1228 |
| 966 | 169 | 4758 | 513 |
| 4509 | 2411 | | |

★ பரிசுக்குரியவர்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளப்படும்.

★ சீட்டிழுப்பு தொடர்பாக ஆதரவளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

சுருக்கெழுத்தாளர் பயிற்சி (தமிழ்/ஆங்கிலம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் ஆதரவுடன் வதிரியில் நடைபெறவுள்ள மேற்படி பயிற்சிக்கான விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் 12, 13, 14ஆம் திகதிகளில் கழகப் பயிற்சி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

— செயலாளர்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்,
வதிரி, கரவெட்டி.
06 - 07 1993.

(26391)

---

## சுருக்கெழுத்தாளர் பயிற்சி

01 - 07 - 1993 ஆம் திகதி பத்திரிகையில் விளம்பரமான மேற்படி விடயம் தொடர்பாக

அ. தட்டெழுத்தாளர் பயிற்சி (ஆங்கிலம்)
ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆ. தட்டெழுத்தாளர் பயிற்சி (தமிழ்)
தமிழில் திறமைச்சித்தியுடன் ஆங்கிலம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

16 - 25 வயதிற்கு உட்பட்டவர்கள் தாம் வதியும் இ. செ. சி. சங்க, பிரிவுத் தலைவர்/செயலாளர் சிபார்சுடன் தமது விண்ணப்பங்களுடனும், சான்றிதழ்களுடனும் எமது பணிமனையில் 12 - 07 - 93 [பிற்பகல் 2 - 00 மணிக்கு] நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
07-07-93

(சி/5444)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 04 — 08 — 1902
மறைவு: 08 — 06 — 1993

### அமரர் செல்லம்மா முத்துக்குமாரு

திதி வெண்பா

ஆண்டு ஸ்ரீமுக ஆனி திங்கள் வைகாசி
ஈண்ட சதுர்த்தித் தேய்பிறையில் - மீண்டார்
செல்லம்மா முத்துக் குமரன்றாள் இப்புவியில்
எல்லாம் அவனென் றறி.

— குடும்பத்தினர்.

தொல்புரம்,
சுழிபுரம்.

(சி-5371)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தின் கைத்தொழில் மேம்பாட்டிற்காக மேற்கொள்ள வேண்டிய சில நடவடிக்கைகளை ஒன்றிணைக்கும் முகமாக "தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம்" உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே தற்பொழுது முழுமையாக இயங்கிக் கொண்டிருக்கும் கைத்தொழில் நிறுவனங்கள், தொடர்ச்சியாக இயங்கி தற்கால சூழ்நிலை பாதிக்காதிருக்கும் கைத்தொழில் நிறுவனங்கள், புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் கைத்தொழில் நிறுவனங்கள் யாவும் தம்மை இந் நிறுவனத்தில் தவறாது பதிவு செய்யும்படி வேண்டப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்கு இ. 230, இராமநாதன் வீதி (பல்கலைக்கழகத்திற்கு முன்பாக) யில் அமைந்துள்ள தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம்.

(சி/5441)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

1993 Aug. மீட்டல்; வினா-விடை வகுப்பு

பொருளியல்

**S. வரதராஜன்** B A (Hons.)

| 1st. in ARTS<br>1st. in COM. | B. A.<br>B. COM. Part I |
|---|---|
| ★ பொருளியற் தத்துவங்கள்<br>★ இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு | ★ Micro - Economics<br>★ Macro- Economics |
| ஆரம்பம்: 10 - 07 - 1993 சனி 5-15p.m. | ஆரம்பம்: 11 - 07 - 1993 ஞாயிறு 3-30p.m. |

★ அச்சிடப்பட்ட வினா-விடைக் குறிப்புகள் வழங்கப்படும்.

★ முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்து வினா-விடைக் குறிப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும்.

**பாரதிதாசன் கல்வி நிறுவனம்**

(BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5361)


# அராலியில் எஞ்சியுள்ள முகாம்களும் இடம் மாறும்

## அகதிகளின் அவல நிலை தீரும்

அராலி, ஜூலை 8

அராலியில் தற்போது எஞ்சியுள்ள அகதி முகாம்களை மழை காலத்துக்கு முன்னர் பாதுகாப்பான இடம் ஒன்றுக்கு இடம் மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் ஏற்படுத்தப்பட்ட அகதி முகாம்களில் 5 அகதி முகாம்கள் கடந்த ஆண்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம் மாற்றப்பட்டிருந்தன.

மிகுதி நான்கு முகாம்களும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

இந்த முகாம்கள் உரிய முறையில் பராமரிக்கப்படவில்லை என்று அகதிகளால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள்—

மற்றும் இந்த முகாம்கள் அராலியில் பாதுகாப்பற்ற பகுதியில் இருந்தமை— ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே அவற்றை இடம் மாற்ற முடிவாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்காக 1991ஆம் ஆண்டு இந்த அகதி முகாம்கள் நிறுவப்பட்டிருந்தன.

அடிக்கடி இடம்பெற்ற ஷெல் வீச்சுக் காரணமாகவே ஐந்து முகாம்கள் கடந்த ஆண்டு இடம் மாற்றப்பட்டிருந்தன.

தற்போது ஏனைய முகாம்களையும் இடம்மாற்ற முடிவாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது (இ-12)

## வாழ்க்கை செலவுப் புள்ளி

யாழ்ப்பாணம், ஜூலை 8

ஜூன் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1408 6 என குடிசன மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ)

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ மதகுரு கைதாகி விடுதலை

கொழும்பு, ஜூலை 8

யாழ்ப்பாணத்தில் இருந்து சமீபத்தில் கொழும்பு வந்திருந்த கிறிஸ்தவ உதவி மதகுரு ஒருவர் வெள்ளவத்தையில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும்—

அவர் சார்ந்த கிறிஸ்தவ தேவாலய யாழ் ஆதீனம் உயர் பொலீஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்ததன் மூலம் 8 மணி நேரத்தின் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டதாகவும்— கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பிரஸ்தாப கிறிஸ்தவ உதவி மதகுரு வெள்ளவத்தையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் தங்கி இருந்ததாகவும்—

அவர் அங்கு தங்கியிருந்த போது வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்தில் தமது பெயரைப் பதிவு செய்திருந்தார் என்றும்—

சம்பவதினம் பொருள்களைக் கொள்வனவு செய்ய காலி வீதிக்கு வந்தபோதே ரோந்துப் பொலீஸார் அவரைக் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

கிறிஸ்தவ மதகுரு அணியும் அங்கியுடனேயே இவர் கைதானார் என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. [இ]


**வெளிவந்துவிட்டது!**

வர்த்தகத்தின் அண்மைக்கால அபிவிருத்திகள் (நடைமுறை விடயம்)

ஆசிரியர்கள்:
திரு. க. தேவராஜா
திரு. இ. இரட்ணம்

விலை 30/-

பெற்றுக்கொள்ளும் இடம்:

**அறிவகம் புத்தகசாலை**

கலை, வர்த்தக கல்லூரி முன்பாக,
வெலிங்டன் சந்திக்கு அருகில்,
யாழ்ப்பாணம்.

(சி-5364)



## வருடாந்த உற்சவம்

நீர்வேலி மேற்கு மாசிவன் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 08 - 07 - 1993 ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும்.

தினமும் மாலை 4-00 மணிக்கு அபிஷேக ஆராதனை ஆரம்பமாகி அம்பாள் திரு வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். இவ்வண்ணம் அடியார்கள் அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

- நிர்வாக சபை.

அன்பளிப்பு:

சடாட்சரம் புவிச்சந்திரன்,

**வீனஸ் தங்கமாளிகை,**

இல. 187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(26405)



## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஆனி மாதம் 26ஆம் நாள் (10-07-1993) சனிக்கிழமை பகல் 10-45 மணி முதல் 12-35 வரை வரும் கன்னி லக்கின
★ சுபமுகூர்த்த வேளையில் ★

| எமது புதல்வன் திருநிறை செல்வன் **ஜெகதீஸ்வரன்** அவர்களுக்கும் | எமது புதல்வி திருநிறை செல்வி **சுமதி** அவர்களுக்கும் |
|---|---|

68/4, இராசாவின் தோட்டம், புல்லாந்தி லேனில் அமைந்துள்ள மணமகள் இல்லத்தில் திருவருள் துணை கொண்டு திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைப்பாகை அணிதல்: முற்பகல் 7-30 — 8-35 (மணமகன் இல்லம்)
மங்கல நாண் பூணல்: முற்பகல் 10-45 — 12-35 (மணமகள் இல்லம்)

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு திருமதி வே. சோமசுந்தரம்,
(புளியங்கூடல், ஊர்காவற்றுறை),
அன்ரன் வீதி,
தாவடி.

திரு. திருமதி மு. திருநாவுக்கரசு,
(புளியங்கூடல், ஊர்காவற்றுறை),
68/4, இராசாவின் தோட்டம்,
புல்லாந்தி லேன்,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(26380)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 01 — 1927



மறைவு: 20 — 06 — 1992

**அமரர் இளையதம்பி இராசையா**

(விஜயா சைபிக்கிள் வேக்ஸ் உரிமையாளர், காங்கேசன் சி. கூ., பணிப்பாளர் இயக்குநர்)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும், உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்கவில்லை. குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்தீர். அன்போடும் பண்போடும் நல்வழி காட்டி, வாழவைத்த தெய்வமாகிய உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மக்கள், மருமகள்.
பேரப்பிள்ளை மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.
விஜயா சைபிக்கிள் வேக்ஸ் தொழிலாளர்கள்.

சுந்தரோடை,
சுன்னாகம்.

(5984)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அழகிய வெள்ளை, பிறவுண் பொமனேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. (ஏற்பு தடுப்பு, பூச்சி நீக்கியது) தொடர்பு: F. அன்ரனி, இல. 392, பிரதான வீதி (வண்தியன் சந்தி), யாழ்ப்பாணம். (26386)

இந்திய நாவல்கள், சொற்களஞ்சிய அகராதி (மெட்ராஸ் யுனிவெசிற்றி) ஆகியன தொகையாக விற்பனையாகின்றன. நூல்நிலையங்களும், பாடசாலைகளும் உடன் தொடர்புகொள்ளவும்: மகிமிலன் புத்தகசாலை, 3 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-5349)

## நாகபூஷணி படம்

நயினை நாகபூஷணி அம்மன் படம் பிறேம் செய்து விற்பனையாகிறது. விலை ரூபா 125/-. கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-5327)

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். விடை அளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும் புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26403)

## தவறிவிட்டது

பொலிகண்டியில் இருந்து உடுப்பிட்டி யூனியன் சந்தியால் திரும்பி வதிரிச்சந்திக்கு இடையில் இரண்டு சக்கர உழவுயந்திர 71ஸ்ரீ 5484 புத்தகம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடன் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். வ. செல்வரத்தினம், (அண்ணா) அமலன் கிறைண்டிங் மில், யாழ். பருத்தித்துறை பிரதான வீதி, ஆவரங்கால். (26376)

## மணமகள் தேவை

இந்து மதம், சுத்த சைவ போசனமும், பொருளாதாரமும், பல தொழிற்பயிற்சிகள் பெற்று, பெரிய தொழில் ஸ்தாபனத்தில் வேலை செய்பவருக்கு; ஓர் ஆசிரியர் 29 வயதுக்குட்பட்ட மருமகளைத்தேடுகின்றார் தொழில் புரியும் பெண்ணானால் சீதனம் பெரும் பிரச்சினையாகாது மே/பா இல. 15, உதயன் சேவை நிலையம், 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (5979)

## வெளிவந்துவிட்டது!

G.C.E. A/L உதவி நூல், பௌதீகப் பயிற்சி அடங்கல்-2, உத்திக் கணக்குகளும்-பயிற்சிகளும், வெப்பவியல், ஒலியியல் தொகுப்பு: M. ஆறுமுகசாமி, B Sc Dip- in-Ed, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (6317)

## தேவை

இரு வருட அனுபவமுள்ள அத்துடன் Bill எழுதக்கூடிய ஆங்கில அறிவுள்ள, விடுதியில் தங்கி வேலை செய்யக்கூடிய பார் கீப்பர் (Bar Keeper) உடனடியாகத் தேவை. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். மிகுதி விவரம் நேரில். இல. 539, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-5436)

## இலவச திருமண சேவை

33 வயது, புனர்பூசம், செவ்வாயற்ற, ஜேர்மனியில் தொழிலுள்ளவருக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் அல்லது Sponsoring செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (26372)

## G.C.E. O/L-1993

கடந்த கால வினா-விடை 92 உட்பட விற்பனையாகிறது. உயர் கல்விச் சேவை நிலைய வெளியீடுகள் கழிவு விலையில் விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கு விசேட சழிவு வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, கலை வர்த்தகக் கல்லூரி முன்பாக, யாழ்ப்பாணம். (சி-5360)

---

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 95**

புதிய பிரிவு

பொருளியல்

திரு. உதயன்

ஆரம்பம்:

**10 — 07 — 1993**

(12-00 மணி)

(சி-5366)

---

## கலை, வர்த்தக கல்லூரி

**C. C. A.**

**G. C. E. A/L 94**

புதிய பிரிவு

ஆரம்பம்:

**11 — 07 — 1993**

குறிப்பு:

1. மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது.
2. பகுதி II முழுப் பாடத் திட்டமும் வினா-விடையும்.
3. பகுதி I வினா-விடை மீட்டல் வகுப்பும் நடைபெறும்.

– நிர்வாகி.

(சி-5357)

---

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

மானிப்பாய்

## முக்கிய அறிவித்தல்

### கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேச எல்லைக்குள் உள்ளவர்கள் தங்கள் நாய்களைக் கட்டி வளர்க்க வேண்டுமென்பதையும், கட்டாக்காலியாக வீதிகளில், ஒழுங்கைகளில், பொது இடங்களில் திரியும் நாய்கள், இதற்கென இச்சபையால் நியமிக்கப்பட்ட ஊழியர்களால் பிடிக்கப்பட்டு அழிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய். 28 06 1993 (சி/5370)

---

உ
சிவமயம்

# ★ சைவ மகாநாடு ★

(புண்ணிய நாச்சி தரும அறக்கட்டளை)

**இடம்: நாவலர் ஆச்சிரம மண்டபம்**

நீராவியடி - யாழ்ப்பாணம்

**காலம்: 09, 10, 11 ஜூலை 1993**

வெள்ளி, சனி, ஞாயிறு

**நேரம்: தினமும் மு.ப. 8-45 — 12-30**
**பி. ப. 3-00 -- 6-00**

சைவ அறிஞர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்கள்- ஆசிரிய மாணவர்கள், கல்லூரி ஆசிரியர்கள் - மாணவர்கள் கருத்துரை வழங்குவார்கள்.

சைவ அபிமானிகள்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

- சைவபரிபாலனசபை.

யாழ்ப்பாணம். (6315)

---

யா/கலாநிதி ஆ தியாகராசா ம. ம. வி.
காரைநகர்.

## சயம்பு தின விழா

இடம்: யாழ். ரசிக ரஞ்சன சபா மண்டபம்.

காலம்: 09 - 07 - 1993 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 - 00 மணி

தலைவர்: திரு. செ. தேவதாசன் அவர்கள் (கொத்தணி அதிபர்)

பிரதம விருந்தினர்:

திரு. இ. அருளானந்தம் அவர்கள் (உதவிக் கல்விப்பணிப்பாளர்-பண்டத்தரிப்பு கல்விக்கோட்டம்)

கல்லூரி நூற்றாண்டு நினைவுப் பேருரை
பேராசிரியர் வே. தர்மரத்தினம்.

திரு. செ. பத்மநாதன் (முன்னாள் அதிபர்)

மாணவர்கள் கலை நிகழ்ச்சிகள்

"காரை ஒளி"

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(26402)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 10 — 07 — 1912



மறைவு: 08 — 06 — 1993

அமரர்

### தம்பர் காசிப்பிள்ளை கந்தசாமி

(சாமியார்)

(காரைநகர் களபூமி, வளுப்போடை முன்னாள் T.K.K சுருட்டுக் கம்பனி உரிமையாளர்)

அப்பா நீ எங்கள் தெய்வமே! அப்பா, அப்பா என்று அன்புடனே அழைத்தோமே! தப்பாமல் எங்களை தயவுடனே வளர்த்தாயே! செப்பாமல் நீங்கள் சென்றீரோ சிவன் பாதம். எப்போதும் மறவோமே அப்பா நீ எங்கள் தெய்வமென்று ஆதலால் தன்னை சித்திவிநாயகனை பிரார்த்திக்கின்றோம் நீங்கள் முத்தி பெற வேண்டுமென்றே. இன்று 08 - 07 - 93இல் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகள், மதிய போசனம் ஆகியவற்றிலும் பங்குபற்றுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

வட்டு தெற்கு.
உதயன் வீதி.
வட்டுக்கோட்டை. (6311)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 01 — 1929



மறைவு: 08 — 07 — 1990

அமரர்

### நாகலிங்கம் தேவபாலசுந்தரம்

[முன்னாள் விளையாட்டு அதிகாரி]

நிழலின்றித் துணையின்றி, மகிழ்வின்றி நகர்ந்து சென்ற மூன்றாண்டில் நிலைத்து நிற்கும் உங்கள் நினைவலைகள் ஓயவில்லை.

மனைவி, மகன்.

"தேவஸ்தான்"
கைதடி. (26401)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அரசாங்கத்துக்கு சுயநினைவு வருமா?

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள தமது உறவினர்களையும், முப்பத்து மூன்று பொலிசாரையும் இங்கே — யாழ்ப்பாணத்தில் — விட்டு விட்டு தாம் மட்டும் கொழும்பு செல்லப்போவதில்லை என்று சிங்களப் பொதுமக்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பிள்ளைகள், கணவன்மார், சகோதரர்கள் என்று தமது குடும்ப உறுப்பினர்களைப் பார்ப்பதற்காக தென்னிலங்கையைச் சேர்ந்த எழுபத்தெட்டுப் பேர் கடந்த மாதம் பதினெட்டாம் திகதி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். அவர்களில் நாற்பத்திரண்டு பேர் மூன்று வாரங்கள் கடந்த பின்னரும் இன்னமும் இங்கேயே தங்கி நிற்கிறார்கள்.

தமது குடும்ப உறுப்பினர்களான யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்காக அப்போது அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தியதாலும், இரண்டொரு நாட்களில் அதற்கான இணக்கம் காணப்பட்டதாலும் தாம் கொழும்பு செல்லும்போது அவர்களும் கூட வருவார்கள் என்ற மகிழ்ச்சியில் உறவினர்கள் திளைத்திருந்தனர்.

ஆனால் அவர்தம் மனக் குதூகலம் இரண்டு தினங்கள் மட்டுமே நீடித்தது. அரசாங்கம் தனது முடிவைத் திடீரென மாற்றிக் கொண்டதால் அவர்களின் மகிழ்ச்சி நீர்க்குமிழி ஆயிற்று! அவர்களது எதிர்பார்ப்புகள் வீணாயின. கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லை.

இங்கு தங்கியுள்ள சிங்களப் பொதுமக்களின் புதிய நிலைப்பாடு — தமது குடும்ப உறுப்பினர்கள் இல்லாமல் — தாம் கொழும்பு செல்வதில்லை என்ற நிலைப்பாடு — கொழும்பு அரசாங்கத்தின் கண்களைத் திறக்குமா என்பதே இப்போது எழும் கேள்வியாகும்.

ஜனாதிபதியும், சில அமைச்சர்களும், கூட்டுப்படைத் தலைமையகத்தில் சில அதிகாரிகளும் சேர்ந்து நடத்திய மாநாட்டிலேயே குறிப்பிட்ட சில பொருள்கள் மீதான தடையை நீக்கி, யுத்தக் கைதிகளை மீட்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் முப்படை உயர்வட்டாரங்கள் தெரிவித்த எதிர்ப்புக்கு அஞ்சி, தமது சொற்களைத் தாமே விழுங்கி விட்டனர்! துணிச்சல் இல்லாத பலவீனர்கள், பாவங்கள்!

ஆனால் தனது அந்தப் பலவீனத்தை மறைப்பதற்காக புலிகள் அதிகளவு பொருள்களை அனுப்புமாறு கேட்பதாகவும், இணக்கத்தை மீறி விட்டதாகவும் பழியை விடுதலைப் புலிகள் மீது போட்டது அரசு. அரசு ஒரு பங்கு என்றால் கொழும்புப் பத்திரிகைகள் பத்து மடங்காகச் சன்னதம் ஆடின!

கப்பலில் வந்த பொருள்களை புலிகள் கட்டுக்கொள்ளை அடித்துவிட்டார்கள் என்றும், இணக்க நிலை முறிந்து போவதற்குச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவே காரணம் என்றும் கற்பனைகளை எழுதிப் பரப்பி சிங்கள மக்கள் மத்தியில் அரசின் வாக்குறுதி மீறுதலையும், தோல்வியையும் மறைக்க முயல்கின்றன!

உண்மை ஒரு நாள் வெளியே வரும் என்ற அடிப்படை நடைமுறையை மறந்து போகும் அளவுக்கு கொழும்பு அரசுக்கும் தெற்கின் பத்திரிகைகளுக்கும் மதி மயங்கிப் போயிற்று!

இந்த மதிமயக்கத்திலிருந்து மீண்டு, சுயநினைவு பெற்று, இப்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களின் மன உளைச்சலை தீர்க்க அரசு முன்வருமா? இங்குள்ள சிங்கள மக்களின் நிலைப்பாடு அரசின் மீதான அழுத்தமாக மாறி, மீண்டும் ஓர் இணக்க நிலைக்கு உந்துதலாக அமையுமா?

இவை குறித்து பாதகமாக மட்டும் நினைக்க முடியாது. இருளில் ஒரு மின்னற் கீற்று தோன்றவும் இடமுண்டு. எதனையும் நிச்சயமாகக் கூற முடியாதல்லவா?

---

ராஜீவ் கொலை வழக்கில்

# எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு கொலைப் பயமுறுத்தல்

சென்னை, ஜூலை 8

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள எதிரிகள் சார்பில் ஆஜராகி வாதாடும் சிரேஷ்ட வழக்கறிஞர் துரைசாமிக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

திரு. துரைசாமியே இதனை நேற்று நடந்த வழக்கு விசாரணையின் போது வழக்கை விசாரித்து வரும் விசேட நீதிவான் எஸ். எம். சித்தீக்கின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இது தொடர்பாக தமக்கு வந்த ஜூன் 26 ஆம் திகதியிடப்பட்ட கையெழுத்திடப்படாத கடிதம் ஒன்றையும் அவர் விசேட நீதிவானிடம் கையளித்தார்.

இந்த வழக்கில் இருந்து திரு. துரைசாமி விலகாவிட்டால் அவர் கொலை செய்யப்படுவார் என்று அக்கடிதத்தில் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

''ராஜீவ் காந்தி கொலை நாட்டுக்கு துரதிர்ஷ்டமானது. இதில் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் இக்குற்றத்தைச் செய்தவர்களே. அவர்களை நிரபராதிகள் என்று நிரூபிக்க முயன்றால் நீங்கள் ஒழித்துக் கட்டப்படுவீர்கள்'' என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

திரு. துரைசாமியின் வீட்டுக்கும் தொலைபேசி மூலம் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## இசை, நடன கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஜூலை 8

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் 1994 ஆம் ஆண்டு தமிழ் மொழிமூலமான இசை நடன கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

ஜி. சி. ஈ சாதாரண தர பரீட்சையில் தமிழ், கணிதம், சங்கீதம் அல்லது நடனம் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் சித்தி அடைந்தவர்கள் இதற்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கலாம்.

இது தொடர்பாக மே 14 ஆம் திகதி வர்த்தமானியையும், உள்நாட்டு வர்த்தக திணைக்களத்தில் தொழில் நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு தொடர்பான ஜூன் 3 ஆம் திகதி வர்த்தமானியையும் யாழ். மின்சார நிலைய வீதியிலுள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம்.

தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்ப முடிவு திகதி நாளை [9 ஆம் திகதி] என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-162]

## அகில இலங்கை சைவமாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 8

அகில இலங்கைச் சைவ மாநாடு நாளை வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்கள் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டில் திருமுறை ஓதுதல், வேதபாராயணம், பண்ணிசை, விரிவுரைகள், கலை நிகழ்ச்சிகள், உரையாடல் ஆகியன இடம் பெறும்.

அத்துடன் சைவ பரிபாலன சபையில் நீண்டகாலம் சேவையாற்றிய சட்டத்தரணி திரு. சி இராசேந்திரனுக்குப் பாராட்டு விழா நடத்தப்படும்.

1991, 1992 இல் நடைபெற்ற சைவசமயப் பாடப் பரீட்சையில் அகில இலங்கைப் பரிசுக்குரியவர்கள், பண்ணிசைப் போட்டியில் பரிசு பெறுவோர் ஆகியோருக்குப் பரிசுகளும் வழங்கப்படும். (எ)

## பரீட்சை ஆக. 2 இல்

ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் இரண்டாம் திகதி ஆரம்பமாகிறது. இப்பரீட்சை ஆகஸ்ட் 24 ஆம் திகதி வரை நடைபெறும்.

## சன்மார்க்க சபை நிறைவு விழா

குருப்பசிட்டி சன்மார்க்க சபை சன்மார்க்க நுண்கலை மன்றத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கொண்டாடப்படும்.

இதனை ஒட்டி மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் ஓவிய சிறப்புக் கண்காட்சி ஒன்று நாளை வெள்ளிக்கிழமையும் மறுதினம் சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும்.

சன்மார்க்க நுண்கலை மன்ற மாணவரின் ஓவியங்கள் சிற்பங்களுடன் அரிய ஓவிய சிற்பத்துறை சார்ந்த நூல்களும் கண்காட்சியில் இடம் பெறும். ஓவிய சிற்பத்துறை சார்ந்த நூல்களின் விற்பனையும் நடைபெறும்.

மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''ஓவிய சிற்பத்துறையில் இன்றைய எதிர்பார்ப்புகள்'' என்ற பொருளிலான கருத்துப் பரிவர்த்தனைக் களமும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் பரிசளிப்பு விழாவும் இடம் பெறும். (க)

## சுபாஷின் சிலை தகர்ப்பு

இந்திய விடுதலைப் போராட்ட வீரர் சுபாஸ் சந்திரபோஸின் வெண்கலச் சிலை நேற்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

மணிப்பூர் மாநிலத்தில் தலைநகர் இம்பாலுக்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-3)

## கைதான வல்வை வாசியின் ரூ. 30 ஆயிரம் எங்கே?

### இன்ஸ்பெக்டர் மீது வழக்கு

கொழும்பில் கைதான வல்வெட்டித்துறை வாசி ஒருவரிடமிருந்து பொலீஸார் 80 ஆயிரம் ரூபாவைக் கைப்பற்றி இருந்தனர் — அவர் விடுதலை செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுப் பணியகத்தில் இருந்த தனது பணத்தைப் பெறச் சென்றபோது 50 ஆயிரம் ரூபா மட்டுமே இருந்ததாம். 30 ஆயிரம் ரூபா மாயமாகிவிட்டது.

30 ஆயிரம் ரூபா மாயமாகி மறைந்த சம்பவம் தொடர்பாக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பணியகத்தில் கடமையாற்றிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு எதிராக கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிதம்பரநாதன் என்பவருக்கே இந்த அவலம் ஏற்பட்டது.

விடுதலைப் புலிகளின் கப்பலுக்கு வேலை செய்ய ஆட்களை அனுப்பினார் என்ற சந்தேகத்தில் சிதம்பரநாதன் கைதாகி இருந்தார்.

இவரிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு வழக்குத் தொடரப்பட்டபோது, தகவல் கொடுக்கத் தவறிய குற்றத்தை ஏற்று ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் இவர் விடுதலையானார்.

இவர் கைதானபோது இவர்வசம் இருந்து பொலீஸாரால் கைப்பற்றப்பட்ட 80 ஆயிரம் ரூபாவிலேயே 30 ஆயிரம் ரூபா மறைந்துவிட்டது. (இ)

## எம். பிக்கள் அல்லாத---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வஸ்தியில் தங்குவதே சிறந்தது என்று உணர்ந்து, அங்கு தங்கி வருகின்றனர் என்றும் —

தமது அரசியல் எதிரிகள், குறிப்பாக விடுதலைப் புலிகளிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள சிராவஸ்வதியே பாதுகாப்பான இடம் என்று அவர்கள் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

யாழ். செயலகத்தில்

## பயிலுநர்எழுது வினைஞராக 50 பேர் நியமனமாவர்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ். செயலகத்தில் 50 பேர் பயிலுநர், எழுதுவினைஞராக நியமிக்கப்பட உள்ளனர்.

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினர் இந்த நியமனங்களை வழங்கவிருக்கின்றனர்.

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்ற 115 பேர் ஏற்கனவே யாழ் செயலகத்தில் பயிலுநர் எழுதுவினைஞர்களாக பணியாற்றுவதாகவும் —

மேலும் 50 பேரை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் —

தொழிற்பயிற்சி அதிகார சபையினர் வடக்கு — கிழக்கு மாகாண பொறுப்பதிகாரி திரு. ம. சிவயோகசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இம்முறை ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் இரு பாடங்களில் சித்தியடைந்தவர்களை பயிலுநர் எழுதுவினைஞர் பதவிக்கு நியமிக்க முடிவாகி உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரேமசா கொலை;

## ஆனைக்கோட்டை வாசியை விடுவிக்கக் கோரி மனு

கொழும்பு ஜூலை 8

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலையை அடுத்து கைது செய்யப்பட்ட ஆனைக்கோட்டை, பிள்ளையார் வீதியைச் சேர்ந்த செல்லையா அன்னராஜா என்பவரை விடுதலை செய்யக் கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவரது மனைவியான கோதைநாயகி அன்னராஜா என்பவரே இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

செல்லையா அன்னராஜா கடந்த மே மாதம் பதினோராம் திகதி முதல் ரகசியப் பொலீஸ் நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பிரேமதாசா கொலையுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் இவரது சகோதரரான சைலேந்திரன் என்பவர் பற்றி தகவல் அறியவே இவர் பொலீஸாரினால் அழைத்துச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

## வீரப்பன் சுற்றிவளைப்பு

சென்னை, ஜூலை 8

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் மறைந்திருக்கும் காட்டுப்பகுதியை பொலீஸார் சுற்றி வளைத்துள்ளனர் என்றும் —

வீரப்பன் இப்போது காட்டுக்குள் சிக்கிக்கொண்டுள்ளார் என்றும் கர்நாடகப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

இப்பணியில் ஆயிரத்து 200 பொலீஸார் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஏ. கே. 47 துப்பாக்கிகளை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல் இருக்கும் மேலூர் முகாமில் இருந்து தப்பிச் சென்றவர்களில் இவரும் ஒருவர் என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் மறைந்து இருந்த இடத்தை பொலீஸார் முற்றுகையிட்டு இவரைக் கைது செய்தனர். இவரது இரு கூட்டாளிகளையும் பொலீஸார் கைது செய்தனர். அதனைத் தொடர்ந்து 8 இந்தியப் பிரஜைகளையும் பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சந்திரன் மேலூர் முகாமில் இருந்து தப்பிய பின்னர் மன்னார் சென்று [illegible] 13 ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளில் சிலவற்றை தமிழகத்துக்குக் கடத்தி வந்து [illegible] பட்டது. (இ-எ)

திருநெல்வேலி
தலங்காவற் பிள்ளையார் கோவில்
மஹோற்சவம்-1993
- கௌரவிப்பு -
இன்று 08-07-1993 இரவு 9 மணிக்கு
மஹோற்சவ காலத்தில் தெய்வீக அருளுரை வழங்கிய
கம்பன் கழகப் பேராளர்கள்
திரு. ஆறு. திருமுருகன்
திரு. த. சிவகுமாரன்
ஆகியோர்
அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்
திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
தலைமையில்
திரு அ. சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களால்
பட்டமளித்து கௌரவிக்கப்படுவார்கள்
தலங்காவல் இளைஞர்கள்
★ விளம்பர அன்பளிப்பு:-
ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்
திருநெல்வேலி - சந்தி
(சி/5445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மரியதாஸ் சந்திரமலர்

(முன்னாள் கோண்டாவில் இராமகிருஷ்ணா கல்லூரி)

எம். மரியதாஸின் அன்பு மனைவி திருமதி சந்திரமலர் (ஆசிரியை) 04-07-1993 ஞாயிற்றுக்கிழமை அன்று வவுனியாவில் காலமாகிவிட்டார். அன்னார் புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற துரைசிங்கம் - கமலாவதி தம்பதிகளின் அன்பு மகளும், ரஞ்சிதமலர் (ராசாத்தி) (மலேசியா), சத்தியபாலன் (துரை) (கோண்டாவில்), கருணைமலர் (விஜயா) (ஜேர்மனி), சத்தியதாசன் (சிவம்) (கனடா), சத்தியலிங்கம் (பாபு) (பாபு எரிபொருள் வர்த்தக நிலையம், திருநெல்வேலி), திவ்வியமலர் (நளினி) (கனடா), சத்தியபரன் (ரகு) (ஜேர்மனி), நவமலர் (பவானி), சதீஸ்வரன் (ராஜு) (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீதரன் (மலேசியா) யோகேஸ்வரி [பவா], கமலநாதன் [ஜேர்மனி], வினோபா [கனடா], கடம்பமலர் [நயினாதீவு], ஜெகதீஸ்வரன் [கனடா], தனபாக்தேவி [கோண்டாவில்], கமலகாந்தன் [பவானி [ரேடிஸ் சென்ரர் சுன்னாகம்], ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகுணா, யமுனா, முரளி, ரூபன் [சிங்கப்பூர்] ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும், கார்த்திகா, கௌரி, கௌதமன், கிருத்திகாதரன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், வினோ, ராஜா, சுகு, தீபன், சபீ, நிருஜா, கோபிகா, கபிலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், லீலாவதி, பத்மாவதி, சரஸ்வதி, பூபதி, புஷ்பவதி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05-07-1993 திங்கட்கிழமை அன்று வவுனியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
T பாபு

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [26409]

## கார்த்திகேசு சுப்பிரமணியம்

(பிரபல சுருட்டு வியாபாரி)

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த கார்த்திகேசு சுப்பிரமணியம் 07-07-1993 இல் காலமானார்.

இவர் அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், பரமேஸ்வரி, திருமங்களம் (ஜேர்மனி), காந்திமதி, பராசக்தி (ஜேர்மனி), வேலாயுதபிள்ளை (ஜேர்மனி), வெற்றி வேலாயுதபிள்ளை, வசந்தராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம், செல்வராசா (ஜேர்மனி), சிவஞானசுந்தரம், தர்மலிங்கம் (ஜேர்மனி), பூமாதேவி (ஜேர்மனி), ஞானதேவி, திருஞானசம்பந்தர் (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமனாரும், வசந்தராசன் (ஜேர்மனி), சுகந்தராசன் (அமெரிக்கா), அகிலன் (ஜேர்மனி), விஜிதா (ஜேர்மனி) வாசுகி (ஜேர்மனி), தேவகி ஜேர்மனி), மைதிலி [ஜேர்மனி], குமணன் (ஜேர்மனி), குந்தவி (ஜேர்மனி), தபோதினி (ஜேர்மனி), ரமணன் (ஜேர்மனி), முரளீதரன் (ஜேர்மனி), சுஜந்தி, கரன், நிசாந்தி, சிந்துஜா (ஜேர்மனி), றதீசன் விதூஷன், யூலியன் (ஜேர்மனி), சூரியகுமார், ஈசன், அருள்மதி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புப்பேரனும், கிருஷிகன், கபிலன், திலீபன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று [08-07-93] வியாழக்கிழமை முற்பகல் 10 00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
சு. வெற்றிவேலாயுதபிள்ளை
(மகன்)

இலக்குமி இல்லம்
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (26408)

## சுந்தரம் பாலசுப்பிரமணியம்

(யாழ். பிரதேச தொலைத் தொடர்பு கூட்டுத்தாபன பொறியியலாளர்)

சுந்தரம் பாலசுப்பிரமணியம் நேற்று 07-07-1993 இல் காலமானார்.

அன்னார் திருமதி கமலநாயகியின் அன்புக் கணவரும், செந்தூரன், ஆரூபன், அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும், வி. நடராசா (கட்-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்), கி. சத்தியமூர்த்தி ஆகியோரின் சகலனும், திருமதி தேவி, திருமதி புனிதவதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்றுப் பிற்பகல் 6-00 மணிக்கு கரவெட்டியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வி. நடராசா
(சகலன்)

மத்தொனி,
கரவெட்டி. (26410)

## பரமசாமி சிவயோகம்

[குணம்]

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், 31, புது வீதி, கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமசாமி சிவயோகம் 7-07-93 இல் காலமானார். இவர் க. பரமசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை, அன்னப்பிள்ளை ஆகியோரின் மகளும், பத்மாவதி, பத்மநாதன் (பிரான்ஸ்), சிறீதரன் (சுஜந்தன் ஸ்ரோர் உரிமையாளர் மணிப்புரி), லோகநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அரசரெத்தினம் (இளைப்பாறிய தபாலதிபர்), திலகவதி, இராசரெத்தினம், சிவரெத்தினம் (பிரான்ஸ்), தனலெட்சுமி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயமங்களசிரோன்மணி, இராசரெத்தினம், இரத்தினம்மா, மணி (சுவிஸ்), லோகநாதன், அன்னலெட்சுமி, துரைசிங்கம், அழகரெத்தினம் (மலேசியா], காலஞ்சென்ற நடேசன் ஆகியோரின் மைத்துனியும், விஜியராணி (ஆசிரியை, துரையப்பா ம வி.), ரஜீவன், காண்டீபன், செந்தூரன், பிரதீபா, பிரசாந், பிரமதுரா ஆகியோரின் அன்பு மாமியும், சத்தியசீலன் (பிரான்ஸ்), சபேஸ், தர்ஷிகா ஆகியோரின் பெரிய தாயாரும், சுஜந்தன், அஜிதா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. பரமசாமி
(கணவர்)

31, புது வீதி,
கோய்யாத்தோட்டம்.
(26414)

## கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடியதாக, கட்சி மாறுதலைத் தடுக்கும் அரசமைப்பின் 99 ஆவது ஷரத்தில் உள்ள சம்பந்தப்பட்ட விதிகளை ரத்துச் செய்வது என்று நகல் சட்டமூலத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியில் உள்ள ஹெல உறுமய அணியைச் சேர்ந்த எம்.பிக்களின் ஆதரவு இச் சட்ட மூலத்துக்குக் கிடைக்கலாம் என்று அரசியல் பகுப்பாய்வாளர்கள் குறிப்பிட்டனர்.

''சுதந்திரக் கட்சி எம். பிக்களில் எத்தனை பேரின் ஆதரவு இதற்கு உண்டு. ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு தருவதாக உறுதி கூறி உள்ளதா'' —என்ற கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்,

''இச் சட்டமூலத்தை அனைத்து எம். பிக்களும் ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன்''— என்று டாக்டர் நெவில் பெர்னாண்டோ சொன்னார்.

### அரசு ஆதரிக்கும்

இதேவேளை—

டாக்டர் பெர்னாண்டோ கொண்டு வரும் இச்சட்ட மூலத்தை அரசாங்கம் ஆதரிக்கும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை மேற்கோள்காட்டி சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இது பற்றி போக்குவரத்து அமைச்சரும் சபை முதல்வருமான விஜேபால மெண்டிஸ் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டார்.

இப்பிரச்சினை ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்றக் குழுவில் விவாதிக்கப் படும் என்று மட்டும் அவர் கூறினார்

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் 47 ஆவது பிரிவின் படி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவுடன் அது சட்டவரைவுக்காக சட்டவரைஞருக்கு அனுப்பப்படும் என்று ''சண்டே ரைம்ஸ்'' தெரிவித்துள்ளது.

கட்சி மாறுதலுக்கு ஏற்கனவே அனுமதி அளிக்கப் பட்டிருந்திருப்பின் ஜனாதிபதி பிரேமதாச, முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோர் பெரும்பாலும் உயிருடன் இருந்திருப்பர் என்றும் டாக்டர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

### சிறிமாவோ எதிர்ப்பு

இந்தச் சட்டமூலத்தைத் தாம் ஆதரிக்கப் போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இப்பிரேரணை ஏற்கனவே உட்கட்சிப் பூசலால் பாதிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மேலும் பிளவுகளை உருவாக்கும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

[இ-எ-6]

## பிரேமா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதை சட்டத்தரணிகள் வி. பொன்னம்பலம், சஞ்சே கமகே, விபுல அபயசூரிய, ஆனந்த குணதிலக ஆகியோருடன் முதல் சந்தேக நபரான சமன்சுஜீவா என்ற வர்த்தகர் சார்பில் ஆஜரான ஜோசப் சார்ள்ஸ் ஆட்சேபித்தார்.

அவர் கூறியதாவது:-

விசாரணை முடிந்த பின்னரும் ஒருவரை தடுத்து வைப்பது சட்ட விரோதமானது. அவரின் அடிப்படை உரிமையை மீறுவதாக இருக்கும்- என்றார்.

இந்த நிலையில் மேலதிக அறிக்கை தாக்கல் செய்யும் படியும் விசாரணை பூர்த்தியானதும் மன்றிற்கு அறிவிக்க வேண்டும் என்றும் நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

(சு)

## மேலதிக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதுவித உத்தரவும் வரவில்லை'' என்று கூறி பல்கலைக்கழக அதிகாரிகள் மாணவர்களை அனுமதிப்பதற்கு மறுத்துவிட்டனர்.

இது தொடர்பாக மாணவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரைச் சந்திக்க முயற்சி மேற்கொண்டனர் என்றும்—

அதுவும் கை கூடவில்லை என்றும் — அச்செய்தியில் [illegible]

(இ-3)

# 2 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

## செல்வி வேணுகா செல்வராஜா

நியூ லங்கா பாம் இணுவிலைச் சேர்ந்த செல்வராஜா, அறிவழகி தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி வேணுகா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசை அண்ணா (கோகுலன்), அம்மம்மா, அம்மப்பா (ஐயா), அறிவழகன் பெரியமாமா (பிரான்ஸ்), சுகந்தினி அத்தை (பிரான்ஸ்), மச்சான் பிக்கிறி (பிரான்ஸ்), அன்பழகன் சின்னமாமா (டோகா), சித்தப்பா பரமேஸ்வரன் (டென்மார்க்), சித்தி இன்பழகி (டென்மார்க்), சித்தி பேரழகி, ஊரெழுவில் இருக்கும் அப்பம்மா, அப்பப்பா, பெரியப்பா குடும்பம், சித்தப்பா, பவானந்தம் குடும்பம், திருச்செல்வம் சித்தப்பா, பெரிய அத்தை குடும்பம், மற்றும் சின்ன அத்தை குடும்பம், ஜேர்மனியில் இருக்கும் ரவி அண்ணா, ஹொலண்டில் இருக்கும் மச்சான்மார் (டோச்சன், சுதன்) மற்றும் கண்ணன் மாமா, மச்சாள்மார், மச்சான்மார் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பொன்னாலை வரதராஜப் பெருமான் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

நியூ லங்கா பாம்

கே. கே. எஸ். வீதி,
இணுவில். [சி 5446]

## யாழ். வண் கிழக்கு
## கலட்டி எச்சாட்டி மகமாரி அம்பாள்
தேவஸ்தான
## வருடாந்த மஹோற்சவம்

மேற்படி விழா 09-07-1993 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது என்பதனை அடியார்களுக்கு அறியத் தருவதுடன்.

புதிய இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி தந்த தமிழீழ காவல்துறையினருக்கும், திருவிழா உபயகாரர்களுக்கும், அடியார்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இடைக்கால நிர்வாகத்தினர்

(26415)

# 'புத்தூக்கி'

## மென்பானத் தயாரிப்பாளர் அறிவித்தல்

மென்பானப் பிரியர்களே!

மென்பான விற்பனையாளர்களே!

எமது ''புத்தூக்கி'' விற்பனவுப் பெருக்கம் கண்டு, உள்நோக்குடன், சில விசமிகளால், எமது மென்பானங்கள் பற்றி தப்பான வதந்திகள் பரப்பப்படுவதையிட்டு ஆழ்ந்த வேதனை அடைகின்றோம்.

வதந்திகளை நம்பி ஏமாறாமல், எமக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து, உள்ளூர் தொழில்வளம் பெருக, தரமான பொருள்கள், வெளிவர, தங்களது ஆதரவை நாடுகின்றோம்.

எமது தயாரிப்புக்கள் மென்மேலும் தொழில் நுட்ப மேம்பாட்டுடன் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதை அறியத் தருகின்றோம்.

ஆதரவுக்கு நன்றி

குறிப்பு:- பான்ரா, கொக்கோ கோலா போன்ற 300 மி. லீற்றர் வெற்றுப் போத்தல், பெட்டியுடன் கொள்வனவு செய்யப்படும்

பொது முகாமையாளர்
யாழ். பகுதி தெங்கு ப. பொ. கூ. ச. கொத்தணி.
யாழ்ப்பாணம். (26412)

# மரண அறிவித்தல்

## கந்தையா சபாரட்ணம்

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாக கொண்டவரும், தற்போது வவுனியா, பண்டாரிகுளத்தில் வசித்தவருமாகிய கந்தையா சபாரட்ணம் 7-7-93 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், லீலாவதி (தேவன் அன் கோ உரிமையாளர்), அன்னலட்சுமி, தனபாக்கியம், பத்மநாதன், சிவபாதசுந்தரம் (கனடா), யோகாம்பிகை, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அமரர் மகாதேவன் சோமசுந்தரம், அமரர் இராசேந்திரம், பராசக்தி, புவனேஸ்வரி, அமரர் தில்லையம்பலம், சர்வானந்தம், ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகேஸ்வரன் (தேவன் அன் கோ உரிமையாளர்), தர்ஷினி, அருநேஸ்வரன், சாரதா, பவானி தேவராஜா றஞ்சினி, பரமேஸ்வரன் (சுவிஸ்), சிறிகாந்தன், மோகனரூபி, யசோதா, ரேணுகா, நிரோஷன், கஸ்தூரி, கௌதமன், கீர்த்தனா ஆகியோரின் பேரனும், டானியேல் தர்ஷனின் பூட்டனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 8-7-93 காலை 8.00 மணிக்கு வவுனியா பண்டாரிகுளத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
இ. தனபாக்கியம்
(மகள்)

இல. 467, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (26413)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெறறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org